අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/03 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2022/11/04

வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
தேசிய பாடசாலை அதிபர்கள்
கல்வியியச் கல்லூரி பீடாதிபதிகள்
ஆசிரிய கலாசாலை அதிபர்கள்
ஆசிரிய நிலைய முகாமையாளர்கள்,

**<u>2023 கல்வி அமைச்சில் நியமனம் பெற்ற கல்விசாரா பணிக்குழுவை சேர்ந்த உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற தீர்மானங்கள் - 2023</u>**

மேற்படி தலைப்பில் என்னால் வெளியிடப்பட்ட இலக்கம் 26/2022 மற்றும் 2022.06.20 ஆம் திகதிய கல்வி சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களை 2023.03.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அனுமதிக்கின்றேன்.

02. அந்த உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்கள் தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களும் அறுவுறுத்தப்பட வேண்டியதுடன், 2023.03.01 ஆம் திகதி புதிய சேவை நிலையத்தில் கடமை பொறுப்பேற்க கூடியவாறு அந்த உத்தியோகத்தர்கள் அவர்களுடைய பதலீட்டார்கள் வரும்வரையில் தக்கவைத்திராமல் முறையாக பணிகளில் இருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

03. இந்த இடமாற்ற கட்டளைகளுக்கு உட்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு இதுவரையில் செயல்படுத்தப்படாத, இதற்கு முன் வெளியிடப்பட்ட இடமாற்ற கட்டளையாக இருப்பின், அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் 2023 வருடாந்த இடமாற்ற கட்டளைகளின் மூலமாக வேறு இடங்களுக்கு இடமாற்ற கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின், முன் வழங்கப்பட்ட இடமாற்ற கட்டளைகள் செல்லுபடியற்றதாகும் என கருதி அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. மேற்படி இடமாற்றங்கள் தொடர்பாக 26/2022 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கையின் 08 ஆம் வாசகம் குறித்து தங்களுடைய கவனத்தை ஈர்ப்பதுடன், அது தொடர்பாக இடமாற்றம் பெற்ற அலுவலர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். இந்த இடமாற்ற கட்டளைகளை புறக்கணிக்கும் உத்தியோகத்தர்கள் தொடரபாக 26/2022 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கையின் 08. VIII ஆம் வாசகத்திற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

05. மேற்குறிப்பிட்ட 26/2022 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கையில் அல்லது அச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட கல்விசாரா பணிக்குழுவைச் சார்ந்த

உத்தியோகத்தர்கள் தொடர்பான வருடாந்த இடமாற்ற நடைமுறையில் அல்லது 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் 1 ஆம் தொகுதியில் XVIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக மற்றும் மேற்குறிப்பிட்ட 26/2022 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கையின் 06 ஐஐ பந்தியில் குறிப்பிட்டப்பட்டுள்ளவாறு தமது இடமாற்ற கோரிக்கை தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழு கவனம் செலுத்தப்படாத பட்சத்தில் மாத்திரம் வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவிற்கு விடயங்களை சமர்ப்பிக்கலாம். அவ்வாறான கோரிக்கைகள் இத்துடன் 01 என இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டு 2022.11.18 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டு:ம். இதற்காக 0112784716 எனும் தொலைநகல் இலக்கத்தையும் பயன்படுத்தலாம்.

06. இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவின் மூலமாக வழங்கப்படும் தீர்மானங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் 1 ஆம் தொகுதியில் 231ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, 23 ஆம் இலக்க பின்னிணைப்பு மூலமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம்' அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் முடிவுகள் வழங்கப்பட்ட பின்னர் முன்வைக்கப்படும் மேன்முறையீடு, குறைபாடுகள், அல்லது நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில், வருடாந்த இடமாற்ற முடிவுகளை குறிப்பிட்ட திகதியில் இருந்து பின்போடப்பட மாட்டாது என்பதனை மேலும் அறியத் தருகின்றேன்.

07. மேலும் மேற்படி முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்கள் தொடர்பான விடயங்கள் அமைச்சின் ரவவிள://அழுந.பழஎ.டம வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

01. செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு - த.அ.கொ.
02. சகல மேலதிக செயலாளர்கள்
03. தலைமை நிதி அதிகாரி (ஐ.்.ஐஐ)
04. பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)
05. மேலதிக செயலாளர்கள் (பொறியியல்)
06. தேசிய பாடசாலை பணிப்பாளர்
07. கல்வியியற் கல்லூரி ஆணையாளர்
08. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

(02–08) த.தேவையான நடவடிக்கைகளுக்காக